# இந்திய அரசியலமைப்பு

**1.** இந்திய திட்டக்குழுவின் இறுதியான துணைத்தலைவர்
(A) மன்மோகன் சிங்
(B) நரேந்திர மோடி
(C) அருண் ஜேட்லி
**(D) மான்டேக் சிங் அலுவாலியா**

**2.** இந்தியாவில் நீதிப்புனராய்வு அதிகாரம் வரையறைக்குட்பட்டது. ஏனெனில்
(A) செயல்துறை உயர்வானது
(B) சட்டத்துறை உயர்வானது
**(C) அரசியலமைப்பு உயர்வானது**
(D) நீதிபதிகள் இடமாறுதலுக்கு உட்பட்டவர்கள்

**3.** இந்திய அரசாங்கம் பாரத் ரத்னா மற்றும் பத்மஸ்ரீ விருதுகளை ________ விதியின் கீழ் உருவாக்கியுள்ளது.
(A) இந்திய அரசியல் சட்ட விதி - 14
**(B) இந்திய அரசியல் சட்ட விதி - 18**
(C) இந்திய அரசியல் சட்ட விதி - 25
(D) இந்திய அரசியல் சட்ட விதி - 32

**4.** இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை
(A) 25
(B) 100
**(C) 72**
(D) 2000

**5.** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 370 படி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றம் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில தொடர்புடைய சட்டங்கள் இயற்றுவது
**(A) பட்டியல் I மற்றும் III (ஏழாவது அட்டவணை)**
(B) பட்டியல் I (ஏழாவது அட்டவணை) மட்டும்
(C) பட்டியல் II (ஏழாவது அட்டவணை) மட்டும்
(D) பட்டியல் I, II மற்றும் III (ஏழாவது அட்டவணை)

**6.** பின்வருவனவற்றுள் எந்த ஒன்று இந்திய அரசியலமைப்பு சட்ட விதிகள் 275 மற்றும் 282-ன் கீழ் வழங்கப்படும் மானியங்களுக்கு இடையேயான வேறுபாடுகள் தொடர்பாக சரியான ஒன்று அல்ல?
(A) விதி 275-ன் கீழ், வழங்கப்படும் மானிய உதவி சட்டப்படியானது. விதி 282-ன் கீழ் வழங்கப்படுவது விரிப்புரிமையானது.
(B) விதி 282-ன் கீழ், மத்திய அரசுக்கு திட்டம் சாரா செலவினங்களுக்கும் மானிய உதவி வழங்க அதிகாரம் உள்ளது
(C) விதி 275-ன் கீழ், நிதி ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் மானியங்களை வழங்கலாம்
(D) **விதி 282-ன் கீழ் அமைச்சரவை குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் மானியங்களை வழங்கலாம்**

**7.** நாடாளுமன்ற அவை விதிகளின் படி, சபாநாயகர் அனுமதித்தால், ஒரு தீர்மானத்திற்கான அறிக்கையை தேதி குறிப்பிடாமல் கொண்டு வரலாம் - அப்படி கொண்டு வரும் தீர்மானத்திற்கு என்ன பெயர்?
(A) கவன ஈர்ப்பு தீர்மானம்
(B) ஒத்திவைப்பு தீர்மானம்
(C) நம்பிக்கையில்லா தீர்மானம்
**(D) தேதியில்லா, பெயர் சூட்டப்பட்ட தீர்மானம்**

**8.** பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) P.A. சங்மா | 1. தெலுங்கு தேசம் கட்சி |
| (b) G.M.C. பாலயோகி | 2. சி.பி.ஐ. (மா) |
| (c) மனோகர் ஜோஷி | 3. சிவசேனா |
| (d) சோம்நாத் சட்டர்ஜி | 4. காங்கிரஸ் 1 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| **(B)** | **4** | **1** | **3** | **2** |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**9.** பஞ்சாயத்து அமைப்புக்களுக்கு அரசியலமைப்பு அந்தஸ்து முன் முயற்சிகள் எடுக்கப்பட்டது எந்த குழுவின் பரிந்துரையின் பெயரில்?

(A) G.V.K. ராவ் குழு **(B) L.M. சிங்வி குழு**
(C) அசோக் மேத்தா குழு (D) பல்வந்தராய் மேத்தா குழு

**10.** பின்வரும் இந்திய அரசியலமைப்பின் எந்த விதி உச்சநீதி மன்றத்திற்கு சிறப்பு அனுமதி மனுவினை ஏற்கும் அதிகாரத்தை வழங்குகின்றது?

**(A) விதி 136** (B) விதி 32 (C) விதி 139 (D) விதி 226

**11.** "மதச் சார்பின்மை" என்ற வார்த்தை, அரசியலமைப்பு சட்டத்தின் முகப்பு வரியில் இணைக்கப்பட்டதற்கு முன்னரே உச்ச நீதிமன்றம் "மதச் சார்பின்மை" அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கூறுகளில் ஒன்று என்று கூறிய ஆண்டு எது?

(A) 1975 (B) 1973 **(C) 1976** (D) 1981